பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிருவாகம்) – கிழக்கு மாகாணம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය (පරිපාලන) - නැගෙනහිර පළාත
OFFICE OF THE DEPUTY CHIEF SECRETARY (ADMINISTRATION) - EASTERN PROVINCE

எனது இல. / මගේ අංකය. / My No. EP/02/CMA
உமது இல. / ඔබේ අංකය. / Your No.
திகதி. / දිනය. / Date. 2014.11.18

**மாகாண பொது நிருவாக சுற்றறிக்கை இல: DCS(A)/06/2014**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
நிறுவனத் தலைவர்கள்.

**<u>முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதற்கான காலநீடிப்பு</u>**

மேற்படி விடயம் தொடர்பான கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களின் EP/07/03/Gen ஆம் இலக்க 2014.09.02 ஆம் திகதிய கடிதம் சார்பாக.

02). 2003.03.03 இல் கிழக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III க்கு நியமனம் கிடைக்கப்பெற்ற அலுவலர்களுக்கு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையான கணனிப்பரீட்சையானது உரிய காலத்தினுள் நடைபெறாத காரணத்தினால் அலுவலர்களுக்கு கணனிப் பரீட்சையில் சித்தியடைவதற்கு 2009.07.26 ஆம் திகதி வரையில் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறேன்.

03). இதனடிப்படையில் 2003.03.03 ஆம் திகதியில் நியமனம் கிடைக்கப்பெற்ற அலுவலர்களுக்கு 2009.07.26 ஆம் திகதி வரையில் சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை அறியத்தருவதுடன், மேற்குறித்த திகதியின் பின்னர் சித்தியடையும் அலுவலர்களது சம்பள ஏற்றம் பிற்போடப்படுவதுடன், சித்தியடைந்த திகதி முதலே சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகிறேன்.

04). எனவே மேற்குறிக்கப்பட்டதன் பிரகாரம் 2003.03.03 இல் நியமனம் கிடைக்கப்பெற்ற அலுவலர்கள் கணனிப் பரீட்சையில் சித்தியடைந்ததன் அடிப்படையில் 2009.07.26 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்ட சம்பள ஏற்றங்களை வழங்குவதுடன், வரலாற்றுத்தாளினையும் சீர் செய்யுமாறும் தங்களைக்கேட்டுக்கொள்கிறேன்.

***கலாமதி பத்மராஜா,***

பிரதிப் பிரதம செயலாளர்-நிருவாகம்.

பிரதி:

1. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம். கிழக்கு மாகாணம்.
2. செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்.

கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை.
කන්නියා පාර, වරෝදය නගර්, ත්‍රිකුණාමලය.
Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.

Gen. Office I : 026 2224049
Gen. Office II : 026 2222114
Admin Officer : 026 3269885
Deputy Chief Secretaty : 026 2222703
Assistant Chief Secretaty I : 026 3269883
Assistant Chief Secretaty II : 026 2222593
Fax : 026 2227161
Web :www.ep.gov.lk
E-mail : admin@ep.gov.lk